


முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 103வது பிறந்தநாளை முன்னிட்டு ஆலந்தூர் சட்டமன்றத் தொகுதி தி.மு.க. சார்பில் குன்றத்தூர் வடக்கு ஒன்றியச் செயலாளர் ஏ.வந்தேமாதரம் தலைமையில் நடைபெற்ற மாபெரும் பொதுக்கூட்டத்தில் கழகப் பொருளாளர் டி.ஆர்.பாலு கலந்துகொண்டு உரையாற்றினார். அருகில் கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி, முன்னாள் அமைச்சர்கள் தா.மோ.அன்பரசன், கோவி செழியன் மற்றும் கழக நிர்வாகிகள் உள்ளனர்.

### வில்லிவாக்கம் வடக்கு ஒன்றியம் வெள்ளானூர் ஊராட்சியில்

# முத்தமிழறிஞர் கலைஞரின் 103வது பிறந்தநாள் விழா!

## கழகக் கொடியேற்றி – உணவு வழங்கப்பட்டது!

திருவள்ளூர், ஜூன் 10;

முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களின் 103வது பிறந்தநாள் விழாவை முன்னிட்டு, திருவள்ளூர் மாவட்டம் வில்லிவாக்கம் வடக்கு ஒன்றியம் வெள்ளானூர் ஊராட்சி கொள்ளுமேடு பகுதியில் திமுக சார்பில் சிறப்பு நிகழ்ச்சி நடைபெற்றது.

நிகழ்ச்சியின் ஒரு பகுதியாக கழகக் கொடியேற்றி, பொதுமக்களுக்கு இனிப்புகள் வழங்கப்பட்டதுடன், சுமார் 300 பேருக்கு அன்னதானமும் வழங்கப்பட்டது.

இந்நிகழ்ச்சியில் ஒன்றியக் கழகச் செயலாளர் கோ. தயாளன், மாவட்டக் கழக துணைச் செயலாளர் கரலப்பாக்கம் ராஜேந்திரன், ராமதாஸ், கவர்னர், நாகையன், ஒன்றிய பிரதிநிதி செந்தில் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர். மேலும் கிளைக் கழக நிர்வாகிகள், மகளிரணி, இளைஞரணி நிர்வாகிகள், கழக முன்னோடிகள் மற்றும் ஏராளமான தொண்டர்கள் பங்கேற்று நிகழ்ச்சியை சிறப்பித்தனர்.

நிகழ்ச்சிக்கு வருகை தந்த அனைவரையும் கிளைக் கழகச் செயலாளர் எஸ். புனிதவேல்(எ) ராஜா வரவேற்றார். தொடர்ந்து ஒன்றியக் கழகச் செயலாளர் கோ. தயாளன், ஓ.சி.எப். ராஜேந்திரன், செல்வம், எச்.வி.எஃப். வெள்ளானூர் ஆனந்தன் உள்ளிட்டோர் கலைஞரின் புகழை நினைவுகூர்ந்து புகழஞ்சலி செலுத்தினர். இதில் திமுக நிர்வாகிகள் பலர் கலந்துக் கொண்டார்கள்

### திருவள்ளூர் மாவட்டம் பெரியபாளையத்தில் அரசு கூட்டுறவு சங்க

# மருந்தகத்தில் த.வெ.க. நிர்வாகிகள் ஆய்வு என்ற பேரில் அலப்பறை!

திருவள்ளூர், ஜூன் 10-

திருவள்ளூர் மாவட்டம் பெரியபாளையம் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கக் கட்டிடத்தில் செயல்பட்டு வரும் அம்மா மருந்தகத்தில் தமிழக வெற்றிக் கழக எல்லாபுரம் மேற்கு ஒன்றிய செயலாளர் சஜித் தலைமையில் தவெக நிர்வாகிகள் ஆய்வு என்ற பேரில் அலப்பறை இந்த சம்பவத்தால் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

தவெக நிர்வாகிகள் மருந்தகத்திற்கு சென்று ஆய்வு மேற்கொண்ட போது, அங்கு இருந்த ஒரு மூட்டையை பிரித்து வெளியே கொட்டியதாக கூறப்படுகிறது. அதில் காலாவதியான மருந்துகள் இருந்ததை சுட்டிக்காட்டி, “ஏன் காலாவதியான மருந்துகளை மருந்தகத்தில் வைத்துள்ளீர்கள்?” என்று ஊழியர்களிடம் கேள்வி எழுப்பியதுடன் வாக்குவாதத்திலும் ஈடுபட்டனர்.

இதற்கு பதிலளித்த மருந்தக ஊழியர்கள், காலாவதியான மருந்துகள் விற்பனைக்காக வைக்கப்படுவதில்லை என்றும், அவற்றை தனியாக மூட்டையாக கட்டி வைத்து பின்னர் அப்புறப்படுத்துவது வழக்கமான நடைமுறை என்றும் விளக்கம் அளித்தனர். எனினும், அந்த விளக்கத்தை ஏற்க மறுத்த தவெக நிர்வாகிகள் தொடர்ந்து கேள்வி எழுப்பியதாக கூறப்படுகிறது.

அப்போது, “அரசு அதிகாரிகள் அல்லது மக்கள் பிரதிநிதிகள் யாரும் இல்லாமல் நீங்கள் எவ்வாறு ஆய்வு மேற்கொள்கிறீர்கள்?” என்று கேள்வி எழுப்பப்பட்டது

அரசு அதிகாரிகள் மற்றும் மக்கள் பிரதிநிதிகள் மேற்கொள்ள வேண்டிய ஆய்வுப் பணிகளில் அரசியல் கட்சி நிர்வாகிகள் தலையிடுவது குறித்து அரசு ஊழியர்கள் மத்தியில் அதிருப்தி நிலவுவதாக கூறப்படுகிறது.



சென்னை தெற்கு மாவட்டம், சைதை மேற்கு பகுதி, 142வது (அ) வட்ட கழக துணைச் செயலாளர் கே.சி.பழனிபாரதியின் இல்லவிழாவில் புதல்வி ப.ரிஷிதாவை மாவட்ட கழக செயலாளரும், முன்னாள் அமைச்சருமான மா.சுப்பிரமணியன் வாழ்த்தினார். உடன் பெருநகர சென்னை மாநகராட்சி துணை மேயர் மு.மகேஷ்குமார், மாவட்ட அவைத் தலைவர் எஸ்.குணசேகரன், பகுதி கழக செயலாளர்கள் எம்.கிருஷ்ணமூர்த்தி எம்.சி., இரா.துரைராஜ் எம்.சி., பொதுக்குழு உறுப்பினர் களக்காடிஎல்லப்பன், பகுதி பொருளாளர் வி.பி.ஜானகிராமன், வட்ட செயலாளர்கள் எஸ்.பி. கோதண்டம், சை.மு.சேகர், அட்கோகமலநாதன், மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர் ஆர்.கிருஷ்ணகுமார் உள்ளிட்ட வட்ட கழக நிர்வாகிகள், அனைத்து அணிகளைச் சார்ந்த நிர்வாகிகள் பங்கேற்றனர்.

# சிகரத்தை தகரம் பழிக்கலாமா?

எம்.ஜி.ஆர். இறந்த போது. 1988 ஆம் வருடம் ஜனவரியில், அ.தி.மு.க. பிளவு பட்ட நேரத்தில். எம்.ஜி.ஆர், மனைவி ஜானகி அம்மையாருக்கு காங்கிரஸ் ஆதரவு தரும் என அன்றைய குடியரசுத் தலைவர் வெங்கட்ராமனிடம் கூறிவிட்டு கடைசி நேரத்தில் பல்டி அடித்து, ஜானகி எம்.ஜி.ஆர். ஆட்சியைக் கலைக்கக் காரணமாக இருந்தவர்கள்தானே காங்கிரசார்.

“1976 ஆம் ஆண்டு ஜனநாயக குரலை அடைக்காதீர்கள், இந்தியாவின் மூத்த தலைவர்களை வெளியில் விடுங்கள்” என்று தீர்மானம் போட்டதற்கு தி.மு.க. ஆட்சியையே குடியரசுத் தலைவரை வைத்து கலைத்தவர்கள்தானே காங்கிரஸினர்.

1991ல் ‘விடுதலைப்புலிகளுக்கு ஆதரவு’ என காரணம் காட்டி. தி.மு.க. ஆட்சியைக் கலைத்த புண்ணியவான்கள் தானே காங்கிரசினர்.

காங்கிரஸால் திமுகவுக்கு. துரோகம் நடக்கும் போது மென்மையான பதிலைத் தந்து, தி.மு.க.விற்கு வருடலைத் தந்த கார்த்திக் சிதம்பரம் போன்றோரின் அறிக்கை காங்கிரசை வளர்க்குமா? மாணிக்கம் தாகூர் போன்று தரமின்றி பேசுபவர்களால் காங்கிரஸ் வளருமா?

“தி.மு.க.வில் வாரிசு அரசியலாம்” மாணிக்கம் தாகூர் கூறுகிறார். கசாப்புக் கடைக்காரன் காருண்யம் பேசுகிறான், ஈயத்தைப் பார்த்து இளிக்கிறது பித்தளை என்பது போல, சிகரத்தை தகரம் பழிக்கிறது.

வாரிசு அரசியலை இந்தியாவிற்குத் தந்ததே காங்கிரஸ் தான். முதலில் நேரு, பின் நேரு மகள் இந்திரா, இந்திரா மகன் ராஜிவ், ராஜிவ் மனைவி சோனியா, சோனியா மகன் ராகுல், ராகுல் தங்கை பிரியங்கா என அத்தனை பேரும் எம்.பி.க்கள்.

மாணிக்கம் தாகூர் மட்டும் என்ன வாழுதாம். சுதர்சன நாச்சியப்பனின் அண்ணன் மகன் என்கிற தகுதியோடு டெல்லி சென்று திரும்பியதால், எம்.பி. ஆனவர். தமிழகத்தில் பல போராட்டங்கள் செய்து சிறைக்குச் சென்று எம்.பி. ஆனவரா மாணிக்கம்தாகூர்?

‘காங்கிரசை ஆதரிக்காதவர் எல்லாம் பா.ஜ.க. தான்’ என்கிற கேவலமான, தரம் கெட்ட வார்த்தைகளை மீண்டும் மீண்டும் மாணிக்கம் தாகூர் கூறக்கூடாது என எச்சரிக்கிறேன்.

மேற்கு வங்காளத்தில் மம்தா பானர்ஜி காங்கிரஸுக்கு இரண்டு இடம்தான் தருவேன் என்றதால் கோபித்துக் கொண்டு வெளியேறினீர்கள். காங்கிரஸ் திரிணாமுல் காங்கிரஸ் மோதல் என்றாலே திரிணாமுல் காங்கிரசும் பா.ஜ.க.வும் உறவு என்பதா?

உத்தரப்பிரதேசத்தில், காங்கிரசுடன் சமாஜ்வாடி மோதினால், சமாஜ்வாடி பா.ஜ.க. உடன் உறவு என்பதா?

திரிணாமுல் காங்கிரஸ், சமாஜ்வாடி கட்சிகளுடன் காங்கிரஸ் கட்சி மேற்கு வங்காளத்திலும், உத்திரபிரதேசத்திலும் சீட்டு எண்ணிக்கையில் தேர்தலுக்கு முன்பே பிரிவு,

பிரிவு என்பது வேறு, துரோகம் என்பது வேறு. ஈரம் காயாமல் எதிரியிடம் ஓடிச் சென்றது காங்கிரஸ்.

ஆளுநர் ஆட்சி கூடாது என்பதற்காகத்தான் தமிழக வெற்றிக் கழகத்திற்கு ஆதரவு என்றால், கம்யூனிஸ்ட் கட்சிகள் மாதிரி வெளியில் இருந்து ஆதரவு தர வேண்டியதுதானே?

கம்யூனிஸ்ட்கள், விடுதலைச் சிறுத்தைகள், முஸ்லிம் லீக் மாதிரி தி.மு.க.விடம் சொல்லிவிட்டுச் செல்ல வேண்டியது தானே?

விஜய் அல்லாத ஆட்சி என்கிற பேச்சு சிலரால் எழுந்தது எப்போது? நீங்கள் ஆதரவு தந்தது எப்போது? நீங்கள் அடுத்த நாளே ஆதரவு. இந்த பேச்சு சில நாள் கழித்து தான். அப்படி வந்தபோதும் இரண்டு தலைமையும் முளையிலேயே கிள்ளி வீசியது.

எம்.ஜி.ஆர். காலத்தில் ஒரிசாவின் அன்றைய தலைவர் பிஜூ பட் நாயக் தி.மு.க. அ.தி.மு.க. இரண்டு கட்சிகளும் ஒன்று சேர முயற்சி எடுத்தார். முடிவு நெருங்கியது உண்மை. கடைசி நேரத்தில் அது உடைந்து போனது. ஆனால் அது போல் ஒரு சதவிகிதம் கூட இப்போது நடந்ததா என்றால் இல்லை.

தளபதி அவர்கள் முதல்வர் பதவிக்கு ஆசைப்பட்டிருந்தால் ஜெயலலிதா இறந்தவுடன் அதிருப்தி அ.தி.மு.க.வினரின் தோழமையோடு முதல்வராகி இருக்கக் கூடாதா?

2024ல் பா.ஜ.க.விற்கு 20 எம்.பி. தேவை என்கிற போது தளபதி அவர்கள் பா.ஜ.க.வுடன் போகக்கூடாதா? நான்கு அமைச்சர் பதவி வாங்கி இருக்கலாமே.

பாண்டிச்சேரியில் ரங்கசாமிக்கு 2011, 2026 இரண்டிலும் மெஜாரிட்டி பெறாத போது தி.மு.க. அதற்கு ஆசைப்பட்டதா?

ஆளுநர் ஆட்சி வரக்கூடாது என்பதற்காகத்தான் காங்கிரஸ் ஆதரவு என்றால் அமைச்சருடன் இருக்க வேண்டியதுதானே? எதற்காக முட்டி போட்டு, பல் இளித்து, மாநிலங்களவை உறுப்பினர் கேட்டு வாங்க வேண்டும்.

பிச்சை கேட்பதற்கும் ஒரு தகுதி வேண்டாமா? தேர்தலில் நின்ற தி.மு.க. வென்று இருந்தால், தி.மு.க.விடம் கேட்டிருக்கலாம். 5 சீட்டை வைத்துக்கொண்டு தேர்தலில் எதிரி காலில் விழுந்து கேட்கலாமா? தமிழக வெற்றிக்கழகமும் பாத்திரம் அறிந்து பிச்சை போட வேண்டாமா?

மாணிக்கம் தாகூர், உதயநிதிக்கு ஆலோசனை கூற வேண்டாம். ஒற்றை செங்கலில் நாடாளுமன்றத்தை கலகலக்க வைத்தவர் எங்கள் இளைஞர் அணிச் செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள்.

‘ராகுல் அரசியலில் நேர்மையானவராம்’ மாணிக்கம் தாகூர் கூறுகிறார். ராகுலின் அரசியல் நேர்மை தான் எங்களுக்கு தெரியுமே! தேஜஸ்வி யாதவினை முதல்வர் வேட்பாளர் என உடன் அறிவிக்காமல், பீகாரில் குழப்பத்தை ஏற்படுத்திவிட்ட ராகுல் அரசியல் தான் தெரியுமே?

நாடாளுமன்ற உறுப்பினர். காங்கிரஸ் கொடுத்த தீர்மானம், பதவி இழப்பு விதிகள் சரியில்லை என நாடாளுமன்றத்தில் காங்கிரஸ் பிரதமர் மன்மோகன் சிங் முன்பே முன்பே கிழித்து எறிந்து விட்டு ராகுல் அதே சட்டத்தால் பதவி இழந்து மீண்ட கதை தெரியுமே.

ராகுலின் அரசியல் தூய்மை தான் கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் மயிலாடுதுறையில் ஒன்றுபட்ட தஞ்சை மாவட்ட மண்ணின் மைந்தன் திருநாவுக்கரசருக்கு கொடுக்காமல், திருப்பெரும்புதூர் சுதாவுக்குக் கொடுத்த போதே அவரின் அரசியல் பண்பாட்டைத் தெரிந்து கொண்டோமே.

பாண்டிச்சேரியில் தி.மு.க.வுக்கு 14 இடங்கள் கொடுத்து, அதில் ஆறு இடங்களுக்கு காங்கிரஸ்காரர்களை விண்ணப்பிக்க வைத்ததோடு அந்த ஆறு பேருடன் ராகுல் புகைப்படம் வேறு எடுத்துக் கொண்டது அசிங்கமில்லையா.

வார்டு அளவில் கட்சி நடத்துபவர்கள் கூட இந்த இழிசெயலை. துரோகத்தை செய்ய மாட்டார்கள். அப்படிச் செய்ததால் தான் “லூசுக்கு எதுக்குடா வேஸ்ட்” என ஒரே ஒரு சீட்டை விட கூடுதலாக வெற்றி பெற வைக்கவில்லை.

‘தி.மு.க. பாடம் கற்க வேண்டுமாம்’ மாணிக்கம் தாகூர் கூறுகிறார். பாடம் கற்க வேண்டியது காங்கிரஸ் இல்லையா? கொடுத்த 28ல் 5ல் ஒரு பங்கு கூட முழுமையாக வெற்றி பெறாது 5 உடன் நின்றது காங்கிரஸ், நின்ற தொகுதியில் மூன்றில் ஒரு பங்கு பெற்றது தி.மு.க.

தி.மு.க. காங்கிரசுக்கு எத்தனை ஒத்துழைப்பு, எந்தெந்த வகையில் உழைப்பை பொருளாதாரத்தைத் தந்தது என்பதைப்பற்றி தேர்தலில் நின்ற காங்கிரஸ் வேட்பாளர்களைக் கேட்டால் தெரியும்.


ஒரு மாநிலத்தில் ஆண்ட தி.மு.க. காங்கிரசிற்கு எவ்வளவோ பொருளாதார உதவி செய்தது.

பக்கத்தில் தெலுங்கானா, கர்நாடகாவில் ஆளும் காங்கிரஸ், தி.மு.க. வேட்பாளர்களுக்கு சல்லிக்காசு தந்தது உண்டா? பாண்டிச்சேரியில் தி.மு.க. மொத்தம் ஐந்து. அதில் இப்போது 2026ல் பாண்டிச்சேரியில் கையை எதிர்த்து சூரியன் இரண்டு இடத்தில் வென்றதா? இல்லையா?

பதவிக்காக ஆசைப்படுபவர் இல்லை ராகுல் என்றால், பொது எதிரியான பா.ஜ.க.வை வீழ்த்த திரிணாமுல் காங்கிரஸிடம். பீகாரில் தேஜஸ்வி யாதவிடம், பாண்டிச்சேரியில் தி.மு.க.விடம் விட்டுப் போகாதது ஏன்?

பா.ஜ.க. புதுடெல்லியில் ஆட்சியில் இருந்தும், தமிழ்நாட்டில் வளர்ந்தும். 27 இடங்களுடன் நிறைவு. ஒரே ஒரு இடம் மட்டுமே வெற்றி பெறும் அளவு. 26 தோற்கும் தொகுதியை அ.தி.மு.க. பா.ஜ.க.வுக்கு தந்தது என்றாலும் பொது எதிரி தி.மு.க.காங்கிரஸ் தோற்றுப் போகட்டும் என விட்டுக் கொடுக்கிறது பா.ஜ.க. ஆனால் காங்கிரஸ் கட்சியோ தனது கூட்டாளிகளை அழிக்க நினைக்கிறது.

ஒரு காலத்தில் 5 எம்.பி. க்களை மக்களவையில் பெற்ற கட்சி பா.ஜ.க. சி.பி.ஆர்., பொன்னார், திருநாவுக்கரசர், நீலகிரி மதன். ரங்கராஜன் குமாரமங்கலம் என ஐந்து எம்.பி.க்கள்.



கவிஞர்
**காசிமுத்து மாணிக்கம்**
(கழக வர்த்தகர் அணிச் செயலாளர்)

25 ஆண்டில் பல மடங்கு உயர்ந்தும், அடக்கி வாசித்தது பா.ஜ.க. ஆனால் காங்கிரஸ் 28 பெற்றும், ராஜ்யசபா வந்தும் அடங்காது, எதிரியிடம் ஓடோடி இரண்டு அமைச்சர். ஒரு ராஜ்யசபா உறுப்பினர் பெற்றது. ஆனால் பதவி ஆசை பிடிக்காத காங்கிரஸ் என பெருமை வேறு.

காங்கிரஸ் பரம்பரையாக ஆண்ட பாண்டிச்சேரியில் ஒரே இடம். அதிலும் முதல்வர் வேட்பாளர் வைத்தியலிங்கத்திற்கு டெபாசிட் போனது. என்றாலும் அடங்காமல் பேசக் கூடாது காங்கிரஸ்.

தி.மு.க. தினமும் ஒரு நிலைப்பாடாம். எங்கே? காங்கிரஸிலா? தி.மு.க.விலா?

நேற்றுவரை கர்நாடகத்தின் முதல்வர் சித்தராமைய்யா, இன்று சிவக்குமார். நேற்று முன் தினம் அமைச்சரான ராமலிங்கம் ரெட்டி பதவி ஏற்பு. நேற்று ராஜினாமா. இன்று மீண்டும் பதவி ஏற்பு. தினம் ஒரு நிலைப்பாடு காங்கிரஸ் என்பதற்கு உதாரணம் போதுமா?

இதுவரை தெலுங்கானா, பீகார். கர்நாடகா காங்கிரஸிற்கு தி.மு.க. ஆதரவு. இனி அங்கும் காங்கிரசின் எதிரியே எங்கள் தோழன்.

உங்களின் தரம் இல்லா நடவடிக்கைகளால் இந்தியா முழுவதும் காங்கிரஸ் தோற்றால் அதற்கு மாணிக்கம் தாகூரே பொறுப்பு. எத்தனை பட்டாளம் கூட்டி வந்தாலும் காங்கிரஸ் ஒரு எம்.பி. தொகுதி கூட வெல்ல முடியாது. ஒன்றியத்தில் கூட்டணிகளின் துணையோடு தி.மு.க. ஆட்சியில் அமரும். அந்த ரகசியத்தை சொல்ல முடியாது.

இரட்டை வேடம் தி.மு.க. போடுகிறதாம். மாணிக்கம் தாகூர் கூறுகிறார். ஆமாம் நாங்கள் தான் கேரளாவில் கம்யூனிஸ்ட் பினராயி விஜயனை வீழ்த்தித் துரத்தியது. தமிழ்நாட்டில் கம்யூனிஸ்ட் அலுவலகம் சென்று துண்டு போட்டு பிரவீன் சக்கரவர்த்தி மாநில அமைச்சர்களுடன் சென்று எம்.பி.க்கு வாக்கு கேட்டு கெஞ்சுவது.

மீனோடு சண்டை மீன் குழம்போடு ராசி. மார்க்சிஸ்டின் முதல்வரோடு சண்டை தமிழகத்தின் மார்க்சிஸ்ட் எம்.எல்.ஏ. உடன் ராசியா? தாடிக்கொரு சீயக்காய், தலைக்கு ஒரு சீயக்காய் என்பது போல, கேரளாவுக்கு ஒரு சீயக்காய் தமிழ்நாட்டிற்கு ஒரு சீயக்காயா?

நீங்கள் கட்சி நடத்துகிறீர்களா? இல்லை முனியாண்டி விலாஸ் ஓட்டல் நடத்துகிறீர்களா? ஊருக்கு ஊர் முனியாண்டி விலாஸ் இருக்கும். ஆனால் ஓனர் வேறு வேறு என்பது போல. உங்களைப் போல நடக்க சொல்கிறார்களா?

ஓடிப் போனவளை ஓடிப் போனவள் என்று தானே கூற முடியும், மாரத்தான் ஓடுகிறார் என்றா சொல்ல முடியும்? மை காய்வதற்குள் ஓடியவளை, நாங்கள் போட்ட நகை நட்டுடன் ஓடியவளை அந்த நகையை காட்டி சிகையை உயர்த்தி கொண்டவர்களை எப்படி அழைப்பதாம். நியாயம் மீறி நடந்ததை கூறினால் மேலும் காயப்படுத்தாதீர்கள்.

ஏமாற்றி ஓடி விட்டீர்களே என வருந்தினால் மருந்திடுங்கள் அல்லது மறந்திடுங்கள். காலங்கள் கூட காயங்களை ஆற்றலாம். மாற்றலாம். பதிலுக்கு பதில் என தப்பாக பேசி தப்பு தாளம் வாசிக்க வேண்டாம்.

பாண்டிச்சேரியிலாவது ஒரு சீட் காங்கிரசுக்கு கிடைத்தது. தமிழ்நாட்டில் ஜீரோவுக்கும் குறைவான எண்ணிக்கை இல்லாததால் ஜீரோ கிடைக்கும் காங்கிரஸ் ஜீரோ தான் தளபதி ஸ்டாலின் என்றைக்கும் இந்தியாவின் ஹீரோ தான்.

அன்று போபர்ஸ் ஊழல் முதல் இன்று நேஷனல் ஜெரால்டு ஊழல் வழக்காடு மன்றம் படிக்கட்டு ஏறும். ஆனால் தளபதிக்கு பொய்யாக கூட வழக்கில்லை. எங்கள் தளபதி சலவை செய்யப்பட்ட நிலவு போல தூய்மையான தலைவர்.

மீண்டு வருவார் மீண்டும். மீண்டும் வருவார்.